# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க,*
## கடற்படை (திருத்தச்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, யூன் மாதம் 24 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.50** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2011 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கடற்படை (திருத்தச்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது.]

ச. வ.- ஒ. 30/2010

## (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கடற்படை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**2.**(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"தவறாளர்களின் சுருக்கமுறை விளக்கம்.

28. (1) கடற்படை ஏவுநர் -

(அ) படை நீதிமன்றமொன்றினால் விளங்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் வெளிப் படையாகத் தேவைப்படுத்தப்பட்ட தவறொன்று தவிர்ந்த வேறு தவறொன்று தொடர்பானதாகவுள்ளவிடத்து ;

(ஆ) லெப்டினென்ட், ஏவுநர் அல்லது அதற்குக் குறைவான பதவிவரிசையிலுள்ள அலு வலர், மரணதண்டனைக்குரியதாகாத தவறொன்றைப் புரிந்துள்ளவிடத்தும் அதற்காகக் குற்றஞ்சாட்டப்படவேண்டிய வராகவுள்ளவிடத்தும் ; அத்துடன்

(இ) அவரின் அபிப்பிராயத்தில் புரியப்பட்ட தவறின் தன்மையானது படை நீதிமன்ற மொன்றினால் விளங்கப்படுவதனைத் தேவைப்படுத்தாதிருப்பின்,

அவர், அதன்பின்னர், கப்டன் என்ற பதவி வரிசைக்குக் குறையாத அலுவலரொருவருக்கு, குற்றஞ்சாட்டப்பட்டவரைச் சுருக்கமுறையில் விளங்கும்படி அதிகாரமளிக்கலாம் :

ஆயின், விளக்கம் தொடங்குவதற்கு முன்பாக விளக்கத்தை நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் -

(i) படை நீதிமன்றமொன்றினால் விளங்கப்படுவதற்கா ; அல்லது

(ii) சுருக்கமுறையில் விளங்கப்படுவதற்கா ;

அவர் விரும்புகின்றாரென்பதைக் கேட்டல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், குற்றஞ்சாட்டப்பட்டவர் படை நீதிமன்றமொன்றினால் விளங்கப்படுவதற்கு விரும்புவாராயின், அத்தகைய அலுவலர், குற்றம்சாட்டப்பட்டவர் படை நீதிமன்றமொன்றினால் விளங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல் வேண்டும் :

ஆயின், மேலும், தவறொன்றைச் சுருக்கமுறையில் விளங்குகின்ற அலுவலரொருவரின் தண்டனைத் தத்துவம், சிரேட்ட தன்மை இழப்பிக்கப்படுவதற்கு அல்லது தண்டனைகள் பற்றிய அளவீட்டில் வேறு ஏதேனும் பாரதூரம் குறைந்த தண்டனைக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்